**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்ட கட்டம் II - 2021**

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்ட கட்டம் II இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2016 மார்ச் 17 ஆந் திகதிய எஸ்எல்-பி 115 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட விஞ்ஞாபனம் மற்றும் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம் அப்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுர மாவட்டத்தில் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் பாதுகாப்பான குடி நீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் செயற்திட்டப் பகுதியில் சுகாதார நிலை மற்றும் வாழ்க்கை சுற்றாடலை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 31,598 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 27,301 மில்லியனானதுடன் அதில் ரூபா 26,779 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 23,137 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 4,819 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூனில் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 திசெம்பர் 31 வரை பொது திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 26.42 மில்லியன் சமநிலை சீராக்கங்கள் (Parity adjustments) நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 26.42 | 2022 ஆம் ஆண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | LKAS-21 இன் பிரகாரம் சமநிலை சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட வேண்டியதுடன் தீவு கணக்குகள் மற்றும் செயற்திட்டக் கணக்குகளுக்கு இடையே கடன் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 12 கூறுகளைக் கொண்டிருந்ததுடன் அதன் செயற்பாடுகள் 2017 யூன் மாதத்தில் தொடங்கப்பட்டது. அதில், விரிவான வடிவமைப்பு, கேள்வி உதவிக்கான ஆலோசனை ஒப்பந்தம் மற்றும் 02 எண்ணிக்கையான டபிள் கெப் வண்டிகளை வழங்கி விநியோகிக்கும் ஒப்பந்தங்கள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தன. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 12 இல் 10 கூறுகள் தொடர்பான செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 54 மாதங்கள் கடந்த பின்னரும் 2021 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2021 திசெம்பர் 31 வரையிலும் செயற்திட்டத்தில் குறிப்பிடத்தக்க பௌதீக முன்னேற்றம் எதுவும் காட்டப்பட்டிருக்கவில்லை. எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தங்களின் பெறுகை செயன்முறையின் முன்னேற்றங்கள் பின்வருமாறுள்ளன.

| | செயற்திட்ட கூறு / ஒப்பந்தம் | 2021 திசெம்பர் 31 அளவில் பட்டியலிடப்பட்ட நடவடிக்கை (அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் பிரகாரம்) | பட்டியலிடப்பட்ட காலப்பகுதி | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னேற்றம் | கணக்காய்வு விடயம் |
|---|---|---|---|---|---|
| (அ) | கட்டம் II இற்கான விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி உதவிக்கான ஆலோசனை சேவைகள் | விரிவான வடிவமைப்பு மற்றும் பெறுகை உதவி | 2021 நவம்பர் மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது | விரிவான வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட்டதுடன் பெறுகை உதவி நிலை | ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்**

கொவிட்-19 காரணமாக, 2021 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம், பயணக் கட்டுப்பாடுகள், பணியாளர் வரம்பு போன்ற கட்டுப்பாடுகள், TECs, SCAPC, CPCC ஆகியவற்றில் இருந்து அங்கீகாரங்களையும் ERD ஊடாக JICA இன் இறுதி ஒப்புதல்களையும் பெற்றுக்கொள்ளும் பெறுகை செயன்முறைக்கு எதிர்பார்த்ததை விட அதிக நேரம் எடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், ஆலோசகர் மற்றும் PMU-ANWSP கட்டம் II செயற்திட்டமானது, கொவிட்-19, பயணக் கட்டுப்பாட்டு காலங்களின் போது தொடர்ந்து பணியாற்றுவதன் மூலம் JICA உட்பட மேற்படி அதிகாரிகளிடமிருந்து கேள்வி ஆவணங்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்தது. தொடர்ச்சியான முயற்சியின் காரணமாக, 2021 ஆம் ஆண்டில் 6 பிரதான பொதிகளில் 5 கேள்விகள் கோரப்பட்டன.

மேலும், ஒப்பந்தத்தின் விரிவான வடிவமைப்பு நிலை 2020 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் வடிவமைப்புப் பணிகள் தொடர்பான அனைத்து வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிபுணர்களின் உள்ளீடுகளும் நிறுத்தப்பட்டன. ஆலோசனை ஒப்பந்தம் 2020 செப்தெம்பர் முதல் பெறுகை உதவி நிலையில் உள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

ஒப்பந்தங்கள் வழங்குவதை மேலும் தாமதமின்றி பூர்த்தி செய்வதை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | உள்ளீர்த்தல் வசதி, நீர் சுத்திகரிப்பு பொறி, நீர் சேமிப்பு கட்டமைப்புக்கள், இயந்திரவியல், மின்சாரம் மற்றும் கட்டிட வேலைகள் ஆகியவற்றின் நிர்மாணம் (Lot A) | ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் | 2021 நவம்பர் மாதம் முதல் 2024 மே மாதம் வரை | JICA முற்தகைமை விண்ணப்பதாரர்களுக்கான இணக்கப்பாடு பெறப்பட்டது. எனினும், 2022 மே 31 வரை ஒப்பந்தத்தை செயற்படுத்துதல் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தை வழங்குவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. |

**முகாமைத்துவத்தின் பதில்**

2021.10.24 இல் முற்தகைமை முடிவுகளுக்கான JICA இணக்கப்பாடு பெறப்பட்டது.

Lot A இன் கேள்வி ஆவணத்தின் முதல் வரைவு 2021.01.21 இல் தயாரிக்கப்பட்டது. எனினும், இது உள்ளீர்த்தல், WTP, ஏனைய அனைத்து நீர் தக்கவைக்கும் கட்டமைப்புக்கள் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் இயந்திர மற்றும் மின்சார வேலைகளின் நிர்மாணத்தை உள்ளடக்குகிறதால் கொவிட்-19 காலப்பகுதியின் போது பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட பணியாளர்கள் போன்ற கட்டுப்பாட்டு பணிச்சூழல் காரணமாக, TEC இலிருந்து பரிந்துரைகளைப் பெறுதல் மற்றும் SCAPC இலிருந்து அங்கீகாரங்களைப் பெறுதல் மற்றும் ஆவணத்தைத் திருத்துதல் ஆகியவை ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது மிகப்பெரிய செயற்திட்ட கூறாக இருப்பதால் தாமதமாகியது.

கேள்வி ஆவணம் 2021.09.10 இல் JICA இற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2021.10.11 இல் JICAs கருத்துக்கள் பெறப்பட்டது.

JICAs கருத்துக்களில் கலந்துகொண்ட பின்னர் ஆவணம் மீண்டும் SCAPC ஆல் பின்பற்றப்பட்ட TECs மதிப்பாய்வுக்கு அனுப்பப்பட்டதுடன் இறுதியாக 2022.03.03 இல் அவர்களின் பரிந்துரைகளுடன் JICAs இன் இணக்கப்பாடு பெறப்பட்டது.

JICAs பரிந்துரையின் பிரகாரம் ஆவணத்தைத் திருத்திய பின்னர், 2022.04.20

இல் கேள்வி கோரப்பட்டது. இது முதலில் 2022.06.29 இல் மூடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் நீர் வழங்கல் அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் கேள்விதாரர்களின் கோரிக்கைகள் காரணமாக, நாட்டில் நிலவும் பிரச்சனையான சூழ்நிலையின் காரணமாக கேள்வி சமர்ப்பித்தலின் முடிவுத் திகதி 2022.09.21 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

ஒப்பந்த வழங்கலை பூர்த்தி செய்வதை துரிதப்படுத்துவதற்கும் சிவில் பணிகளை தாமதமின்றி தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | DI, HDPE பரிமாற்றல் பிரதானிகள் (Mains) மற்றும் HDPE விநியோக பிரதானிகளை வழங்குதல் மற்றும் இடுதல் (Lot B) | ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் | 2021 நவம்பர் மாதம் முதல் 2024 ஏப்ரல் மாதம் வரை | தொழில்நுட்ப மதிப்பீடு TEC ஆல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனினும், 2022 மே 31 வரையிலும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. |

**முகாமைத்துவத்தின் பதில்**

பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பணியாளர்கள் போன்ற கட்டுப்பாட்டு பணிச்சூழல் காரணமாக தொழில்நுட்ப கேள்வி மதிப்பீடு தாமதமாகியது. தொழில்நுட்ப கேள்வி மதிப்பீட்டு அறிக்கை 2022.03.03 இல் SCAPC அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் JICA இற்கு அனுப்பப்பட்டது. JICA அவர்களின் அவதானிப்புககளை மேற்கொண்டு கேள்விதாரர்கள் பதிலளிக்க வேண்டிய மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டவற்றிற்கு தெளிவுபடுத்தல்களை கோரியது. அதற்கிணங்க கேள்விதாரர்களிடம் இருந்து தெளிவுபடுத்தல்கள் கோரப்பட்டதுடன், நாட்டின் தற்போதைய பிரச்சனையான சூழ்நிலையை சுட்டிக்காட்டி கேள்விதாரர்கள் மேலும் கால அவகாசம் கோரினர். எவ்வாறாயினும், தெளிவுபடுத்தல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு SCAPC இன் அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கிறது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

ஒப்பந்தம் வழங்கும் பணியை பூர்த்தி செய்வதை விரைவுபடுத்துவதற்கும் காலதாமதமின்றி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | பதவியா மற்றும் கெபித்திகொல்லாவ DS பிரிவுகளுக்கான HDPE, DI விநியோக பிரதானிகளை வழங்குதல் மற்றும் இடுதல் மற்றும் சேவை இணைப்புகளை வழங்குதல் (Lot C1) | ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் | 2021 ஆகஸ்ட் முதல் 2023 நவம்பர் வரை | 2021 ஒக்தோபர் 13 இல் கேள்வி மூடப்பட்டதுடன் TEC ஆல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது, எனினும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் 2022 மே 31 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தை வழங்குவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | 2021 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட கொவிட்-19, ஊரடங்கு உத்தரவுகள், பயணக் கட்டுப்பாடுகள், பணியாளர்களின் வரம்பு போன்ற கட்டுப்பாடுகள் காரணமாக பெறுகை செயன்முறை தாமதமாகியது.<br><br>எனினும், PMU-ANWSP கட்டம் II செயற்திட்டமானது கொவிட்-19, பயணக் கட்டுப்பாடு காலப்பகுதிகளிலும் தொடர்ந்து வேலை செய்ததன் மூலம் JICA உட்பட மேற்படி அதிகாரிகளிடமிருந்து கேள்வி ஆவணங்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்தது. தொடர் முயற்சியின் காரணமாக, Lot C1 இற்கான கேள்வி 2021.07.21 இல் கோரப்பட்டு 2021.10.13 இல் மூடப்பட்டதுடன் 2022.04.08 இல் கேள்வி மதிப்பீட்டிற்கான JICA இணக்கப்பாடு பெறப்பட்டது. மேலும் PMU மற்றும் MWS ஆல் கூட்டாக தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு அமைச்சரவைப் பத்திரம் 2022 ஏப்ரல் மாதத்தின் 3வது வாரத்தில் இருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைக்கு அனுப்புவதற்கு MWS இல் காணப்படுகின்றது.<br><br>2022 மே மாதத்தின் 2வது வாரத்திற்குள் Lot C1 பொதி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், தற்போதைய அரசியல் நெருக்கடி சூழ்நிலை காரணமாக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் ஒப்பந்தத்தை வழங்குதல் என்பன தாமதமாகி வருகிறது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | ஒப்பந்தம் வழங்கும் பணியை பூர்த்தி செய்வதை விரைவுபடுத்துவதற்கும் காலதாமதமின்றி அமைத்தல் பணிகளை தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | கஹடகஸ்திகிலிய, ஹொரோவப்பொத்தான மற்றும் ரபாவ பிரதேச செயலக பிரதேசங்களுக்கான HDPE, விநியோக பிரதானிகளை வழங்கி இடுதல் மற்றும் சேவை இணைப்புக்களை வழங்குதல். (Lot C2) | ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் | 2021 ஒக்தோபர் முதல் 2023 திசெம்பர் வரை | கேள்வி 2021 ஒக்டோபர் 21 இல் மூடப்பட்டது. TEC ஆல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனினும், ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது 2022 மே 31 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | 2021 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட கொவிட்-19, ஊரடங்கு உத்தரவுகள், பயணக் கட்டுப்பாடுகள், பணியாளர்களின் வரம்பு போன்ற கட்டுப்பாடுகள் காரணமாக பெறுகை செயன்முறை தாமதமாகியது.<br><br>எனினும், PMU-ANWSP கட்டம் II செயற்திட்டமானது, கொவிட்-19, பயணக் கட்டுப்பாடு காலங்களிலும் தொடர்ந்து வேலை செய்ததன் மூலம் JICA உட்பட மேற்படி அதிகாரிகளிடமிருந்து கேள்வி ஆவணங்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்தது. தொடர்ச்சியான முயற்சியின் காரணமாக, Lot C2 இற்கான கேள்வி 2021.07.28 இல் கோரப்பட்டு 2021.10.21 இல் மூடப்பட்டதுடன் 2022.04.08 இல் கேள்வி மதிப்பீட்டிற்கான JICA இணக்கப்பாடு பெறப்பட்டது, PMU மற்றும் MWS ஆல் இணைந்து தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு அமைச்சரவைப் பத்திரம் 2022 ஏப்ரல் மாதத்தின் 3வது வாரத்தில் இருந்து அமைச்சரவையின் அங்கீகாரத்தை |

பெற்றுக்கொள்வதற்காக அனுப்புவதற்கு MWS இல் காணப்படுகின்றது. 2022 மே மாதத்தின் வது வாரத்திற்குள் Lot C1 பொதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை காரணமாக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் ஒப்பந்தத்தை வழங்குதல் என்பன தாமதமாகி வருகின்றன.

| | |
|---|---|
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | ஒப்பந்தம் வழங்கும் பணியை பூர்த்தி செய்வதை விரைவுபடுத்துவதற்கும் காலதாமதமின்றி அமைத்தல் பணிகளை தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஊ) | சேவை இணைப்புக்களை வழங்குவதற்கான HDPE, விநியோக குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் மற்றும் 250 கொள்ளளவு கொண்ட நீர் கோபுரத்தின் நிர்மாணம் (கட்டம்-I இற்கான Lot C3) | கட்டம் -01 இன் பகுதி காரணமாக அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டத்தில் பட்டியலிடப்படவில்லை. | | கேள்விகள் 2021 நவம்பர் 17 இல் கோரப்பட்டு 2022 சனவரி 12 இல் மூடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | ANWSP கட்டம் II விபரமான வடிவமைப்பு மற்றும் கேள்வி உதவி ஒப்பந்தத்தின் கீழ் Lot C3 பொதிக்கான கேள்வி ஆவணத்தை தயாரிப்பதற்காக JICA இணக்கப்பாடு 2020.10.11 இல் கோரப்பட்டதுடன் JICA இணக்கப்பாடு 2021.02.02 இலேயே பெறப்பட்டது. TEC 2022.03.16 இல் நியமனம் செய்யப்பட்டது. கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக 2021 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் ஊரடங்குச் சட்டம், பயணக் கட்டுப்பாடுகள், பணியாளர் வரம்புகள் விதிக்கப்பட்ட போதிலும் கொவிட்-19, பயணக் கட்டுப்பாட்டு காலப்பகுதியில் தொடர்ச்சியாகப் பணியாற்றியதன் மூலம் PMU ஆனது TEC, SCAPC மற்றும் JICA ஆகியவற்றிடமிருந்து கேள்வி ஆவணங்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடிந்தது. அதன் பிரகாரம் கேள்வி 2022.11.17 இல் கோரப்பட்டு 2022.01.26 இல் மூடப்பட்டது.<br><br>கேள்வி TEC ஆல் 2022.01.27 முதல் மதிப்பிடப்படுகிறது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | ஒப்பந்தம் வழங்கும் பணியை பூர்த்தி செய்வதை விரைவுபடுத்துவதற்கும் காலதாமதமின்றி அமைத்தல் பணிகளை தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ) | நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை சேவை (Lot F) | ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் | 2021 ஆகஸ்ட் முதல் 2024 மே வரை | RFP 2021 யூலை 14 இல் வழங்கப்பட்டதுடன் 2021 செப்தெம்பர் 22 இல் மூடப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீடு JICA இணக்கப்பாட்டிற்காக அனுப்பப்பட்டது. | நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை சேவை பெறுகையில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | வெற்றிகரமான ஆலோசகருடன் ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டியிருந்தது. தற்போதைய அரசியல் மற்றும் சமூக நெருக்கடி சூழ்நிலை காரணமாக MWS/CPCC ஆல் பேச்சுவார்த்தை திகதி வழங்கப்படவில்லை. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | ஒப்பந்தம் வழங்கும் பணியை பூர்த்தி செய்வதை விரைவுபடுத்துவதற்கும் காலதாமதமின்றி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பு மற்றும் பெறுகை உதவிக்காக மாத்திரமே செயற்திட்டத்திற்கான ஆலோசனை ஒப்பந்தம் 2018 மார்ச் 26 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் இது 2020 பெப்ரவரி 20 அளவில் 22 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. பின்னர், விபரமான வடிவமைப்பில் தாமதம் ஏற்பட்டதால் 2022 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பு மற்றும் பெறுகை உதவிக்கான ஆலோசனை ஒப்பந்தத்தின் காலப்பகுதி 2022 யூலை 31 இல் முடிவடைந்த போதிலும் 12 செயற்திட்டங்களில் 10 எண்ணிக்கையிலான செயற்திட்ட ஒப்பந்தங்கள் 2022 யூலை 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | TECs, SCAPC, CPCC இடமிருந்து அங்கீகாரங்களையும் ERD மூலம் JICA இணக்கப்பாடுகளையும் பெற்றுக்கொள்ளுதல், அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் ஒப்பந்தம் வழங்குவதற்கான இறுதி JICA இணக்கப்பாடு ஆகியவற்றை பெறுதல் ஆகிய பெறுகை செயன்முறைக்கு கொவிட்-19, 2021 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட பூட்டுதல் ஊரடங்கு உத்தரவு, பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பணியாளர் வரம்பு போன்ற கட்டுப்பாடுகள் மற்றும் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை போன்றவை காரணமாக எதிர்பார்த்ததை விட அதிக காலம் எடுக்கப்படுகிறது. எனினும், ஆலோசகர் மற்றும் PMU-ANWSP கட்டம் II செயற்திட்டமானது, கொவிட்-19, பயணக் கட்டுப்பாட்டு காலங்களில் தொடர்ந்து பணியாற்றுவதன் மூலம் JICA உள்ளிட்ட மேற்படி அதிகாரிகளிடமிருந்து கேள்வி ஆவணங்களுக்கான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கு அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்தது. தொடர் முயற்சியின் காரணமாக, ஆறில் மூன்று கேள்விகள் வழங்கப்படும் நிலையிலும், இரண்டு கேள்விகள் மதிப்பீட்டு நிலையிலும், ஒரு கேள்வி கேள்வி கோரல் நிலையிலும் இருந்தன. | பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் சமூகங்களுக்கான கருத்தரங்குகளை நடத்துவதற்காக ஆலோசனை ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 4 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆலோசனை ஒப்பந்தம் 2022 யூலை 31 இல் காலாவதியாகியிருந்த போதிலும் இதுபோன்ற பொது விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் சமூகங்களுக்கான கருத்தரங்குகள் 2021 திசெம்பர் 31 வரையிலும் செயற்திட்டத்தால் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம், பயணக் கட்டுப்பாடுகள், பணியாளர்களின் வரம்பு, ஒன்றுகூடுவதைத் தவிர்த்தல், கூட்டங்களை நடாத்துதல் போன்ற கொவிட்-19 கட்டுப்பாடுகள் காரணமாக, பொது விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் சமூகங்களுக்கான கருத்தரங்குகள் ஆகியவற்றை 2021 ஆம் ஆண்டில் நடாத்த இயலவில்லை. எனினும், PMU ஆனது பிரதேச அளவிலான அரசாங்க உத்தியொகத்தர்கள், அரசியல் அதிகாரிகள், CBOக்கள், விவசாய அமைப்புக்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் நிர்மாணத் தளங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கு 2022 சனவரி மாதத்தில் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடங்கி 2022 ஏப்ரல் அளவில் பூர்த்தி செய்திருந்தது. | செயற்திட்ட நிர்மாண பணிகளைத் தொடங்கும் முன்னர் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதலை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்ட ரூபா 7.75 மில்லியன் தொகையான 2021 திசெம்பர் 31 வரையிலான வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் மீதான செலாவணி இலாபம் செயற்திட்டத்தின் விசேட (யென்) கணக்கின் மாதாந்த வங்கிக் கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது சரிபார்க்க முடியவில்லை. | மத்திய வங்கி NWSDB இற்கு வங்கி கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை. PMU கணக்கீடு செய்து பதிவு செய்யும் நோக்கங்களுக்காக பணவளிப்பு பதிவேடுகள் (CS-DRMS அறிக்கை 814) மூலம் விபரங்களை பெறுகின்றது. அதன் பிரகாரம் PMU மத்திய வங்கியிடம் வங்கி கூற்றை கோரும். | மாதாந்த வங்கி கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டம் இரண்டு டபிள் கெப் வண்டிகளை செயற்திட்டப் பணிகளுக்காக ரூபா 19.59 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்திருந்த போதிலும் அதில் ஒரு டபிள் கெப் வண்டியை தலைமை அலுவலகம் பெற்றுக்கொண்டது. தற்போது செயற்திட்ட பணிப்பாளர், சமூகவியலாளர் உள்ளிட்ட ஐந்து பொறியியலாளர்கள் செயற்திட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக, நிர்மாணத்திற்காக காணி கையகப்படுத்துதல், குழாய் பதிக்கும் பணிகள் | செயற்திட்டத்திற்காக இரண்டு டபிள் கெப் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டன. ஆனால் அந்த நேரத்தில் PMU கொழும்பில் வடிவமைப்பு நிலையில் இருந்ததால் ஒரு கெப் வண்டி மாத்திரமே தேவைப்பட்டது. இதன் காரணமாக, PK 3420 வாகனம், தேவையான போது PMU கோரிக்கையின் அடிப்படையில் வாகனத்தை விடுவிக்கும் கடப்பாட்டுடன் WSP ஆல் தற்காலிகமாக கையகப்படுத்தப்பட்டது. 2021.10.06 இல் தலைமை அலுவலகத்திடம் | செயற்திட்டப் பணிகளை சுமூகமாக அமுல்ப்படுத்துவதற்கு போதுமான செயற்திட்ட வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போன்றவற்றிற்கான வீதி அங்கீகாரங்கள், அளவீடு, மேற்பார்வை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் பொது விழிப்புணர்வு மற்றும் சம்பந்தப்பட்ட கையகப்படுத்துதலுக்காக பொதுமக்களுடனான ஒருங்கிணைப்பு போன்றன செயற்திட்டத்தை விரைவுபடுத்தும் வகையில் செய்யப்பட வேண்டும். எனினும், செயற்திட்டப் பதவியணியினரிற்கான போக்குவரத்து வசதியின் கீழ் ஒரே ஒரு டபிள் கெப் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதே நேரம் செயற்திட்டப் பணிப்பாளரும் இந்த சிக்கலை 2021 ஒக்தோபர் 06 இல் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் செயற்திட்டத்திற்கு போதுமான போக்குவரத்து வசதிகளை நிறைவேற்றுவதற்கு அல்லது 2022 யூன் 30 வரையிலும் தலைமை அலுவலகத்தால் பெறப்பட்ட செயற்திட்ட வாகனத்தை விடுவிப்பதற்கு தலைமை அலுவலகம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | வாகனத்தை விடுவிக்குமாறு செயற்திட்ட பணிப்பாளர் கோரியிருந்ததுடன் WSP அவர்களது அனைத்து செயற்திட்டங்களையும் ஒருங்கிணைப்பதற்கு வாகனம் தேவை என அறிவித்திருந்தது. எனவே, GM NWSDB ஒரு வாகனத்தை வாடகைக்கு எடுப்பதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. அதன் பிரகாரம் 2022.01.01 இல் ஒரு வாகனம் வாடகைக்கு எடுக்கப்பட்டு, பொதுமக்கள் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்காகவும் அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அலுவலகங்களுக்குச் செல்வது மற்றும் தொடர்புடைய கையகப்படுத்துதலுக்காக பொதுமக்களுடனான ஒருங்கிணைப்பு போன்ற பெறுகை செயன்முறையை விரைவுபடுத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது, ஆனால் வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனத்தின் கொடுப்பனவிற்கு நிதி கிடைக்காததால் 2022.06.07 இல் வாடகை வாகனம் நிறுத்தப்பட்டது. | |
| (இ) | அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்ட கட்டம் II இன் கெபித்திகொல்லாவ, பதவியா, ஹொரவப்பொத்தான மற்றும் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரதேசங்களை உள்ளடக்கியது, இது மக்கள் பாதுகாப்பற்ற அசுத்தமான நிலத்தடி நீரை நம்பியிருக்கும் பகுதிகள், இது பல் மற்றும் எலும்பு புளோரோசிஸ் மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோய் பரவுவதற்கான முக்கிய அபாயகரமான காரணிகளில் ஒன்றாகும். ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது இந்த கிராமப்புறங்களில் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். எனவே, பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக இந்த நீர் வழங்கல் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது. மக்கள் தாமதமின்றி நிவாரணம் பெற இப்பகுதிக்கான நீர் வழங்கல் | TECs, SCAPC, CPCC இடமிருந்து அங்கீகாரங்களையும் ERD மூலம் JICA இணக்கப்பாடுகளையும் பெற்றுக்கொள்ளுதல், அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் ஒப்பந்தம் வழங்குவதற்கான இறுதி JICA இணக்கப்பாடு ஆகியவற்றை பெறுதல் ஆகிய பெறுகை செயன்முறைக்கு கொவிட்-19, 2021 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட பூட்டுதல் ஊரடங்கு உத்தரவு, பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பணியாளர் வரம்பு போன்ற கட்டுப்பாடுகள் மற்றும் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை போன்றவை காரணமாக எதிர்பார்த்ததை விட அதிக காலம் எடுக்கப்படுகிறது.<br><br>எனினும், ஆலோசகர் மற்றும் PMU-ANWSP கட்டம் II செயற்திட்டமானது, கொவிட்-19, பயணக் கட்டுப்பாட்டு காலங்களில் | செயற்திட்டத்தில் இருந்து அரசாங்கத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு திருத்தப்பட்ட செயற்திட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு அதிகபட்ச முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்திட்டங்கள் பட்டியலிடப்பட்ட கால எல்லைகளுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எனினும் செயற்திட்டத்தின் பெறுகை செயன்முறை பெறுகை திட்டத்தில் காணப்படாததுடன் செயற்பாடுகள் தொடங்கி 54 மாதங்கள் கடந்த பின்னரும் செயற்திட்டத்தின் எந்தவொரு சிவில் நிர்மாண ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, திருத்தப்பட்ட செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் ஐயப்பாட்டிற்குரியதாக உள்ளது. | தொடர்ந்து பணியாற்றுவதன் மூலம் JICA உள்ளிட்ட மேற்படி அதிகாரிகளிடமிருந்து கேள்வி ஆவணங்களுக்கான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கு அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்தது. தொடர் முயற்சியின் காரணமாக, ஆறில் மூன்று கேள்விகள் வழங்கப்படும் நிலையிலும், இரண்டு கேள்விகள் மதிப்பீட்டு நிலையிலும், ஒரு கேள்வி கேள்வி கோரல் நிலையிலும் இருந்தன. | |

**3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டுக்காக ரூபா 1,338 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஒதுக்கீட்டின் 0.22 சதவீதத்திற்கு சமமான ரூபா 3 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 2021 பாதீட்டை தயாரிக்கும் போது கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 2021 Q3 முதல் முற்பண கொடுப்பனவுகள் மற்றும் சில முன்னேற்றக் கொடுப்பனவுகளைச் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் நாட்டின் தற்போதைய நிதி மற்றும் பொருளாதார நிலைமை காரணமாகவும் குறிப்பாக 2022 ஏப்ரல் முதல் அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுதல் மற்றும் JICA இணக்கப்பாட்டை பெறுதல் என்பவற்றில் தாமதம் காரணமாகவும் எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்ள முடியவில்லை. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ANWSP கட்டம் II இற்கு தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை எந்த உள்ளக கணக்காய்வும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |